10/=
பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 13 திங்கட்கிழமை மே 15 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## அமைச்சரவை ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த அமைச்சரவை கூட்டம், திடீரெனக் கைவிடப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. ஆயினும் அமைச்சரவை மாற்றப்படவுள்ளதால், அது குறித்த அதிருப்திகளை அமைச்சர்கள் வெளியிடக்கூடும் என்பதாலேயே நாளைய அமைச்சரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. (அ)







### தையிட்டியில் கண்டுபிடிக்கப்பட்டது

# புலிகளின் ஆயுதக் கிடங்கு?

வலி.வடக்கு தையிட்டிப் பகுதியில் -அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த - புலிகளின் ஆயுதக் கிடங்கு என்று சந்தேகிக்கப்படும் கிணறு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் படையினாரல் விடுவிக்கப்பட்ட தையிட்டி அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள காணியையும், அங்குள்ள கிணற்றையும் அதன் உரிமையாளர் சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்போது கிணற்றுக்குள் ஆயுதங்கள் சில இருப்பதை அவதானித்த அவர், படையினருக்கு தகவலைத் தெரியப்படுத்தினர்.

இன்று காலை குறித்த கிணற்றில், மீட்புப் பணியில் ஈடுபட்ட படையினரே எதிர்பாராத அளவுக்கு பெருந்தொகையான வெடிபொருட்கள் இருந்தன. இன்று மதியம் வரை படையினர் கைக்குண்டுகள் - 242, 30 மி.மீ மோட்டார் குண்டுகள் - 60 4 மீ. மோட்டார் குண்டுகள் 60 என்பன மீட்கப்பட்டன. இன்னும் ஏராளமான வெடிபொருட்கள் அந்தக் கிணற்றில் இருப்பதால் நாளையும் மீட்புப் பணி இடம்பெறவுள்ளது. மீட்கப்பட்ட வெடிபொருட்கள் யாவும் நீரில் பாதிப் படையாதவாறு, பாதுகாப்பு உறையிடப்பட்டிருந்தன.

பெரும் தாக்குதல் ஒன்றுக்காக இந்தக் கிணற்றில் புலிகளால் இந்த ஆயுதங்கள் முன்னர் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (அ-4)

## குமுதினிப் படுகொலை நினைவேந்தல் இன்று



குமுதினிப் படுகொலைகளில் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று நெடுந்தீவில் நடைபெற்றது. இதன்போது ஏராளமானோர் நினைவுத் தூபிக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (எ-1)

### கேப்பாபிலவிருந்து வெளியேற

## 50 இலட்சம் பேரம்



கேப்பாபிலவு இராணுவ முகாமிலிருந்து வெளியேற்றுவதற்காக இராணுவம் கோரியிருந்த 5 மில்லியன் ரூபா பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் குறித்த பணம் தற்போது கையளிக்கப்பட்டுள்ளதால் விரைவில் கேப்பாபிலவு காணிகள் விடுவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிரொலி Ethiroli
விரைவில் அதிக
பக்கங்களுடன்
உங்கள் கைகளில்..

## அருந்தப்பு!



இன்று காலை கிளிநொச்சியிலிருந்து இரணைமடு நோக்கி அதிவேகத்தில் சென்ற ஹையேஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்தது. வந்த வேகத்தில் மரத்தோடு மோதிச் சரிந்தது. இதில் ஹையேஸ் மீளப் பயன்படுத்த முடியாத அளவுக்கு நசுங்கியது. ஆயினும் சாரதிக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களை ஏற்றிச்செல்லும் இந்த வாகனத்தில் நல்லவேளையாக சம்பவம் நடந்தபோது சாரதியைத் தவிர வேறெவரும் பயணித்திருக்கவில்லை. இதனால் பாதிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. (அ)

### வழக்கை மாற்றாதீர்

## வித்தியாவுக்காக உண்ணாவிரதம்





கூட்டு வன்புணர்வின் பின் கோர மாகக் கொலையுண்ட மாணவி வித்தியாவின் கொலை வழக்கை கொழும்புக்கு மாற்றக் கூடாது என்று வலியு றுத்தி புங்குடுதீவில் இன்று முற்பகல் 10 மணி முதல் உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்று வருகின்றது. இந்த உண்ணாவிரதப் போராட் டத்தில் பொது அமைப்புகளின் பிரதி நிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டுள்ளனர். ட் ரயல் அட்பார் முறையில் விசாரிப்பதற்காக வித்தியாவின் வழக்கை கொழும்புக்கு மாற்ற இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனை எதிர்த்து கடந்த 11 ஆம் திகதி புங்குடு தீவில் ஆர்ப்பாட்டமொன்றும் இடம் பெற்றிருந்தது. இதன் அடுத்த கட்டமாகவே சாத்வீக வழியிலான எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகின்றது. (அ)

## மரம் வீழ்ந்து வீடு சேதம்



கடும் காற்றின் காரணமாக மானிப்பாய் ஓட்டுமடம் பகுதியில் அயல் வீட்டிலிருந்த தென்னை முறிந்து விழுந்ததில், வீடு ஒன்றின் கூரைப்பகுதி முற்றாகச் சேதடைந்துள்ளது. இன்று அதிகாலை 2.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ)

# மிரட்டும் இணையத் தாக்குதல்



எந்நேரமும் பாயும் அபாயம்

மீண்டும் ஒரு இணையத் தாக்குதல் எந்நேரமும் நடத்தப்படலாம் என இங்கிலாந்து நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அந்தத் தாக்குதல் இன்று நடப்பதற்கான சாத்தியங்கள் உள்ளது எனவும், அப்படி நடந்தால் அது தவிர்க்க முடியாத ஒன்றாக அமையும் என்றும் அவர்கள் யூகித்துள்ளனர்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு முகாமை (என்.எஸ்.ஏ.), உருவாக்கிய, இணையவழித் தாக்குதல் கருவிகளைக் கொண்டு, உலகின் சுமார் 100 நாடுகளில் உள்ள நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் கணினிக-ளில் 'ரான்சம்வேர்' வைரஸ் மூலம் இணையத் தாக்குதல் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

பின்னர் இந்தத் தாக்குதலை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 'மால்வேர் டெக்' என்னும் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் ஓரளவு கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த வைரஸ் தாக்குதலிலிருந்து மீண்டு, கணினியில் கோப்புகளை திறப்பதற்கு 300 டொலர் முதல் 600 டொலர் வரை செலுத்துமாறு கணினி திரையில் தோன்றியதாகத் தகவல்கள் வெளிவந்தன. அந்த வகையில் சுமார் 50ஆயிரம் டொலர் வரை 3 கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# மீண்டும் ஏவியது வடகொரியா

நேற்றையதினம் தாங்கள் நடத்திய புதிய 'பேலிஸ்டிக்' ஏவுகணைச் சோதனை, மிகப் பெரிய அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறன் படைத்த ஒரு புதிய வகை ஏவு கணையை என்று வட கொரியா தெரிவித்துள்ளது.

செங்குத்தான கோணத்திலிருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை, 2000 கிலோ மீற்றர் உயரத்துக்குச் சென்றது. கிட்டத்தட்ட 700 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பயணித்து ஜப்பானின் மேற்கு கடல் பகுதி யில் விழுந்தது.

புதிதாக பேலிஸ்டிக் ஏவு-கணை உருவாக்கிய தங்களின் திறமையை பறைசாற்றவே இந்த சோதனைகள் நடத்தப் பட்டதாக வட கொரியா தெரிவித்துள்ளது.

# முடங்கியது தமிழகம்



தமிழகத்தில் நேற்று மாலை முதல் போக்குவரத்து ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தால் அங்கு பெரும் அசௌகரியங்களை பொதுமக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

போக்குவரத்து ஊழியர்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து தமிழக அரசுடன் போக்குவரத்து ஊழ-ியர் சங்கத்தினர் நடத்திய பேச்சுகள் தோல்வி யடைந்ததையடுத்து, தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்று (மே 14) பிற்பகல் முதலே தொடங்கினார்.

இன்றும் போக்கு வரத்து வசதிகளின்றி முடங்கிய நிலையில் புதிய பணியாளர்களை அமர்த்தி போக்குவரத்தை சீர் செய்ய தமிழக அரசு முயற்சித்துள்ளது.

அதேவேளை, கடலூர் போக்குவரத்து பணிமனை யில் ஓய்வூதியம் வழங்கக் கோரி ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவர் இன்று காலை மின் கம்பத்தில் ஏறி தற்கொலைக்கு முயன் றமை அந்தப் பகுதி யில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அலியாவுக்கு பிடித்த பிரபாஸ்



ஹிந்திப் படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வரும் அலியா பட், தனக்குப் பிடித்த தென்னிந்திய நடிகர் பாகுபலி படத்தில் கலக்கிய பிரபாஸ் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவருடன் நடிக்க விருப்பமும் தெரிவித்துள்ளார்.


# கூட்டுப்படை குண்டுமழை 20 பயங்காரவதிகள் பலி



ஐ.எஸ். பயங்கரவாதிகளின் சொர்க்கம் என்று சொல்லப் படும் ஈராக்கின் அன்னா நகரத்தில் அமெரிக்க கூட்டுப்படைகள் அதிரடியாக குண்டு மழை பொழிந்ததில் 20 ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் ஐ.எஸ். பயங்கரவாதிகளால் மனிதக் கேடயங்களாக நிறுத்தப்பட்டுள்ளபோதும், கூட்டுப்படைகளால் இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

# சரணடைகிறார்



மேற்கு வங்கப் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நீதிபதி கர்ணன் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பாக சரணடையவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த கர்ணன், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றியபோது, தலைமை நீதிபதி உட்பட 20 பேர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தினார். இதனால், அவர் கொல்கத்தா உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டார்.

பின்னர், உச்ச நீதிமன்றம் கர்ணன் மீது தொடுத்த அவமதிப்பு வழக்கில் அவருக்கு ஆறு மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவரை கைதுசெய்ய பொலிஸார் முயற்சித்தபோதும் அவர் தலைமறைவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். அணிகளின் நிலை (இன்று வரை)

| அணி | போ | வெ | தோ | ச | மு.அ | பு |
|---|---|---|---|---|---|---|
| மும்பை | 14 | 10 | 4 | 0 | 0 | 20 |
| புனே | 14 | 9 | 5 | 0 | 0 | 18 |
| ஹைதராபாத் | 14 | 8 | 5 | 0 | 1 | 17 |
| கொல்கத்தா | 14 | 8 | 6 | 0 | 0 | 16 |
| பஞ்சாப் | 14 | 7 | 7 | 0 | 0 | 14 |
| டில்லி | 14 | 6 | 8 | 0 | 0 | 12 |
| குஜராத் | 14 | 4 | 10 | 0 | 0 | 8 |
| பெங்களூர் | 14 | 3 | 10 | 0 | 1 | 7 |

குறிப்பு: போ : போட்டி வெ : வெற்றி தோ : தோல்வி ச : சமன் மு.அ. : முடிவற்றது பு : புள்ளி

## ஐ.பி.எல். நேற்றைய ஆட்ட முடிவு

- புனே 9 விக்கெட்டுகளால் வெற்றி
  பஞ்சாப்: 73 (15.5) - புனே: 78/1 (12)
- பெங்களூர் 10 ஓட்டங்களால் வெற்றி
  பெங்களூர்: 161/6 (20) - டில்லி: 151 (20)

# வசப்படுத்தியது பாகிஸ்தான்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் வென்றதன் மூலம் பாகிஸ்தான் அணி, டெஸ்ட் தொடரைத் தன்வசப்படுத்திக்கொண்டது.

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வந்தது.

இதில் முன்னர் நடைபெற்ற 2 போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றன.

இந்நிலையில் மூன்றாவது போட்டி கடந்த 10ஆம் திகதி டொமினிக்காவில் ஆரம்பித்தது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, தனது முதல் இன்னிங்ஸிற்காக 376 ஓட்டங்களையும் மேற்கிந்தியத் தீவுகள் அணி 247 ஓட்டங்களையும் சேர்த்தன.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றுமுன்தினம் 304 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒரு விக்கெட் இழப்புக்கு 7 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுற்றது.

மீண்டும் நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்த அந்த அணி, 202 ஓட்டங்களுள் சுருண்டது.

அந்த அணியின் ஷேஸ் தனி ஆளாக நின்று கடைசிவரை போராடி 101 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

இந்தப் போட்டியில் 101 ஓட்டங்களால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, 2-1 என்ற கணக்கில் தொடரையும் தன்வசப்படுத்தியது.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் ஷேஸ் தெரிவுசெய்யப்பட, தொடர்நாயகனாக பாகிஸ்தானின் யாசிர் ஷாஹ் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

அரசுடமையாகிறது

# மாலபே

சர்ச்சைக்குரிய மாலபே நெவில் பெர்னான்டோ தனியார் வைத்திய சாலையை அரசுடமை யாக்கும் அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ள தாக, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள் ளார். இது குறித்த எழுத்து மூல ஆவணத்தில் தானும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கையெழுத்திட்டுள்ள தாகவும் அவர் தெரிவித் துள்ளார்.
அத்துடன் எந்தவொரு நஸ்டஈடுகளும் இன்றி, குறித்த வைத்திய சாலையை அரசுக்கு வழங்க வைத்தியசாலை அதிகாரி கள் விருப்பம் தெரிவித் துள்ளதாவும் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் சுட் டிக்காட்டியுள்ளார்.

2 மணி நேரத்தில்
500/=
சம்பாதிக்க வேண்டுமா?
தொடர்புக்கு
021 300 4848

வடக்கு மக்களுக்கு

# 120 வீடுகள்

அபுதாபி செல்வந்தர் நன்கொடை



வடமாகாண அகதிகளின் மீள் குடியேற்றத்துக்கென ஐக்கிய அரபு அமீரகம் அபுதாபி நாட்டைச் சேர்ந்த செல்வந்தரான மஹ்மூத் பேட் ஹாலி அப்துல்லாஹ் அல்ஹாஜ் 120 வீடுகளை அமைத்துக் கொடுக்கமுன்வந்துள்ளார். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வேண்டு கோளின் பேரில் தனது குடும்ப உறுப்பினர்க ளுடன் இலங்கைக்கு வரு கைதந்த அவர் முல்லைத் தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று அங்கு மீளக் குடியேறியுள்ள மக்களைச் சந்தித்த பின்பே வீடுகள் அமைத்துக் கொடுக்க முன்வந்ததாகத் தெரிவிக் கப்படுகின்றது. (உ- 2)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிக்கல

# மின்னஞ்சல்களை திறக்காதீர்!



அனாமதேய ஆபத்து மிகுந்த மின்னஞ்சல்கள் தொடர்பாக இலங்கை கணினி அவசர தொழிநுட்ப சேவைப்பிரிவு எச்சரிக்கை விடுத் துள்ளது. WannaCry எனப்படும் கணினி பொறியை சீர்குலைக் கும் நிகழ்ச்சித் திட்டங் களில் இருந்து பாது காக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அந்தவகையில்:
- Update Windows Patches
- விண்டோஸ் பெச்சஸ் களை மேம்படுத்திக் கொள்ளவும்.
- Backup all documents to an external drive - கணி னியில் உள்ள அனைத்து தரவுகளை யும் பிறிதொரு பிரத்யேக ஹாட்டிரை வில் பதிந்து சேமித்து கொள்ளவும்.
- அனாமதேய சந்தேகத் திற்கிடமான உள்ளீடுக ளுடன் வரும் மின்னஞ் சல்கள் திறக்க வேண்டாம் எனவும், அவதானமாக அவற்றை அகற்றிவிட வேண்டும் எனவும் இணையப் பய னாளர்களிடம் கோரப் பட்டுள்ளது. (எ)

# நூல்கள் வெளியீடு



கொற்றை.பி.கிருஷ்ணானந்தனின் சாம்பல் பூத்த வானமும் சில நட்சத்திரங்களும் , கொற்றாவத்தையில் உலவும் குட்டிக்கதைகள் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் திருமண மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற் றது. (ஆ)

மன்னார் அடம்பனில்

# நினைவேந்தல் நிகழ்வு

தமிழினப் படுகொலை நினைவு நாள் நிகழ்வு மன்னார் பொது அமைப்புக்களின் ஒன் றியத்தின் ஏற்பாட் டில் 18 ஆம் அனுஷ் டிக்கப்படவுள்ளது. மன்னார் அடம்பனில் எதிர் வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.15 மணிக்கு குறித்த நிகழ்வு அனுஷ்டிக்கப்பட வுள்ளது. இன அழிப் புக்கு உள்ளாக்கப் பட்ட உறவினர்களின் பங்கேற்புடன் நிகழ் வுகள் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக மன் னார்பொது அமைப் புக்களின் ஒன்றியத் தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித் தார். (உ-02)

# மோடிக்கு அவமரியாதை!



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை பௌத்த பிக்குகள் அவமரியாதை செய்துவிட்டார்கள் என இந்தியத் தரப் பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. இருநாள் பயணமாக கடந்த வியாழக் கிழமை இலங்கை வந்தார் மோடி. வெள்ளிக்கிழமை காலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற வெசாக் நிகழ்வில் அவர் கலந்து கொண்டார். இதன்போது மண்டபத்தில் அமர்ந்திருந்த பௌத்த பிக்குகளை நோக்கி இருகை கூப்பி வணக்கம் தெரிவித்தார் மோடி. ஆனால், பிக்குகள் பதில் வணக்கம் செலுத்தாததோடு, மரியாதை செலுத்தும் வகையில் எழுந்து கூட நிற்கவில்லை. அதன் பின்னரும் மோடி பிக்குகளை நோக்கி குனிந்தும் வணக்கம் செலுத்தினார். அப்போதும் பிக்குகள் மசியவில்லை. கடைசியில் மோடி புன்னகையோடு அகன்றுவிட்டார்.
இதனைச் சுட்டிக்காட்டி, ஒரு வல்லரசு நாட் டின் தலைவரை பிக்குகள் வேண்டுமென்றே அவமானப்படுத்தி விட்டதாக இந்திய ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

பாதணிக்குள் ஹெரோய்ன்

# பாக்.பிரஜை கைது

10 மில்லியன் ரூபா பெறுமதியான, சுமார் ஒரு கிலோகிராம் நிறைகொண்ட ஹெரோன் போதைப் பொருளை கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டில் பாகிஸ்தான் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கத்திணைக்கள அதிகாரிகள் நேற்று காலை இவரைக் கைதுசெய்துள்ளனர். டுபாயிலிருந்து கராச்சி வழியாக இவர் இலங்கைக்கு வந்துள்ளார். சந்தேகநபர், தன்னுடைய சப்பாத்துகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்தே, போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்திவந்துள்ளார். (ஊ)

மோடியின் ஹெலிகளுக்கு எதிராக

# 10 முறைப்பாடுகள்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வரு கையின் போது, இந்திய விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ-17 ரக ஹெலிகொப்டர்களுக்கு எதிராக, இதுவரையிலும் 10 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என ஹட்டன் பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் புஸ்பகுமார ஹெட்டியாராச்சி தெரிவித்தார். அந்தக் ஹெலிகள், ஹட்டன் டன்பார் மைதானத்தில் தரையிறக்கப்பட்டபோது ஏற்பட்ட சேதங்கள் குறித்தே 10 பேர் முறைப்பாடு செய்துள்ளனர். (உ)

# குறைந்த வட்டி கடன் திட்டம்

அரசாங்கத்தின் திரி-உதான குறைந்த வட்டி கடன் திட்டம் தற்சமயம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.
இந்த வருடத்தில் மட்டும் 447 கோடி ரூபாய் நிதி கடனுதவியாக வழங்கப் பட்டது என்று நிதி அபிவிருத்தி திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரியங்க அத்தபத்து தெரிவித்தார்.
50 ஆயிரம் வேலைவாய்ப்புக்களை உரு வாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஓட்டப்போட்டியில் உரசல்



இன்று காலை சாவகச்சேரியிலிருந்து யாழ்நகர் நோக்கி போட்டியிட்டுக்கொண்டு ஓடிய பயணிகள் பேருந்தும் ஹண்டர்வாகனமும் நுணாவில் சந்தியில் உரசிக்கொண்டன.

# காற்று எச்சரிக்கை

நாட்டின் வடக்கு பகுதி யில் மணிக்கு 50 கிலோ மீற்றருக்கு அதிகமான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்று வளிமண் டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
பெரும்பாலான பிரதேசங் களில் பிற்பகல் 2மணியின் பின்னர் மழை அல்லது இடி யுடன் கூடிய மழை பெய் யும் என்று திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது.(எ)

## நாளை நாளும் கோளும்

16.05.2017 செவ்வாய்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 02ஆம் நாள்.

பஞ்சமி பி.ப. 12.16 வரை | உத்தரம் பி..ப. 04.37வரை | சித்தயோகம்

இராகுகாலம் 02.53-04.23 | சுபநேரம் 10.23-11.53 | எமகண்டம் 08.53-10.23

கொடியேற்றம்
- புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர்
- வில்லூன்றி வீரகத்தி விநாயகர்
- சாவல்கட்டு அந்திக்குழி ஞானவைரவர்
- சந்திவெளி சித்திவிநாயகர்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தனம் | பரிவு | நலம் | நட்பு | வெற்றி | இலாபம் | சுபம் | அமைதி | பாசம் | கவனம் | பாராட்டு | ஆக்கம் |

# எதிரொலி உதவி வழங்கல்



வடமராட்சி அழகக சங்க உறுப்பினர் ஒருவரின் குடும்பத்துக்கு தையல் இயந்திரத்தை வடமாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளருமான அகிலதாஸ் சிவக் கொழுந்து நேற்று வழங்கினார். (ஆ-11)

## ஆடு கடத்தியவர்கள் அகப்பட்டனர்

திருகோணமலை - கந்தளாயில் அனுமதிப் பத்திரமின்றி, வாகனம் ஒன்றில் 61 ஆடுகளைக் கொழும்புக்கு கொண்டு சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடைகளை துன்புறுத்தும் வகையில் சிறிய வாகனத்தில் ஏராளமான ஆடுகளை கொண்டு செல்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்ட போது, இவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

## அந்த நாள் ஞாபகம்.....!



**1985.05.15**

நெடுந்தீவு மாவலித்துறையில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினி என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது. குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர் கடற்படையால் நடுக்கடலில் வைத்து, கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

# பௌத்தத்துக்கே முன்னுரிமை

புதிய அரசியலமைப் பிலும் பௌத்த மதத்திற்கு முதலிடமே வழங்கப்படும் என்பதில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்களுக்கும் இடமில்லை என மின்வலு மற்றும் புத்தாக்க பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். பாணந்துறையில் இன்று நடைபெற்ற நிகழ்வொன் றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். புதிய அரசி யலமைப்பில் பௌத்தத் திற்கு மத்திற்கு முன்னு ரிமை வழங்கப்படாது என முன்னாள் ஆட்சியாளர் களும் அடிப்படைவாதி களும் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர்.

இந்தக் கூற்றுக்களில் எவ்விதமான உண்மைக ளும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ஊ-09)

## தாதியர் கோரிக்கை நிறைவேற்றுவேன்



விலைமதிக்க முடியாத சிறந்த சேவையான தாதியர் சேவையில் உள்ளவர்களின் நியாயமான அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசாங்கம் தயாராகவுள்ளது என ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச தாதியர்தின நினைவு வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இச்சேவையின் தரம், சேவையில் உள்ளவர்களின் மனங்களிலேயே தங்கியுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.






யாழ்ப்பாணம் செலான் வங்கியின் 15ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று காலை சிறப்பாக நடைபெற்றன. இதில் வங்கிப் பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மே 25 இற்குள் பதவிகள் பறிபோகும்!**

# முக்கிய அமைச்சர்கள் பலருக்கு ஆப்பு

மே 25 ஆம் திகதிகளுக்குள் நாட்டில் அதிரடியான கதிரை மாற்றங்களை ஜனாதிபதி ஏற்படுத் துவார் என நிதி இராஜங்க அமைச் சர்தெரிவித்தார். அமைச்சரவை மாற்றம் தொடர் பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளார். இது தொடர்பாக பேச்சுவார்த் தைகள் நடைபெற்று நிறை வடைந்து விட்டன. முக்கிய பல கதிரைகளில் மாற்றங்கள் நிச்சயம் ஏற்படும். இதனை யாரும் தடுக்க முடியாது என்றார் அவர். (ஊ-09)

# 45ம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பிதழும்

பிறப்பு
30
.
09
.
1971



இறப்பு
02
.
04
.
2017

## அமரர் சிவபுண்ணியம் செல்வநாதன்

**02.04.2017 அன்று சிவபதமடைந்த வடமராட்சி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், நெல்லியோடை, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் சிவபுண்ணியம் செல்வநாதன் அவர்களின் 45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அழைப்பும்.**

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் சிவபுண்ணியம் செல்வநாதன் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர் களுக்கும், தொலைபேசிமூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை16.05.2017 செவ்வாய்க்கிழமை அன்று நெல்லியோடை, அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு விடுக்கத் தவறியிருந்தால் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**நெல்லியோடை, அச்சுவேலி.** **தகவல் : குடும்பத்தினர்**

# இறுதியில் ஞானமுருகன்



"யாழின் நட்சத்திரம் யார்" உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஞானமுருகன் அணி தகுதிபெற்றுள்ளது.

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் மாவட்ட ரீதியிலான "யாழின் நட்சத்திரம் யார்" உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும்மீன் - ஞான முருகன் அணிகள் மோதின.

இதில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற ஞானமுருகன் அணி இறுதியாட் டத்துக்குத் தகுதிபெற்றது. இறுதிப்போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 15.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.